# ஒளி



ஒளி-01 கதிர்-05

காலாண்டு இதழ் - 2002

- சமத்துவம்
- சகோதரத்துவம்
- நல்லொழுக்கம்
- சமாதானம்
- அபிவிருத்தி

VADAMARACHCHI
OLI

## ஒளி அமைப்பு

ஆத்தியடி பருத்தித்துறை

## FORUT (Oli)

**Jaffna East Project Point Pedro.**

அன்பளிப்பு - ரூபா 10.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியப் பிரமாணம்

நாம் புகைத்தலையும் மதுவையும் நாடமாட்டோம்
எம்மைச் சார்ந்தவர்களையும் நாடவிடமாட்டோம்
அதன் பயனாக நாமும் எம்மைச் சார்ந்தவர்களும்
சேமிப்பாலும் நல்லொழுக்கத்தாலும் மேம்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி

ஒளி: 01 கதிர் : 05

2002

அச்சுப்பதிப்பு:
**மாசிலா அச்சகம்**
நெல்லியடி

வெளியீடு:
**ஒளி அமைப்பு**
வடமராட்சி பருத்தித்துறை.

## ☆ மறக்காதீர்கள் ☆

சர்வதேச புகைப்பொருள்
எதிர்ப்பு தினம்
மே 31

உலக சுற்றாடல் தினம்
ஜூக் 5

சர்வதேச போதைப்பொருள்
எதிர்ப்பு தினம் ஜூன் 26

சர்வதேச நல்லொழுக்க தினம்
அக்டோபர் 3

## உள்ளே

* இசாயனப் பீடை
கொல்லிகள்
ஆக்கத்திற்கா?
அழிவிற்கா?
* பூமிப் பெண்ணுக்கு
சீதனம் தேடு
* வாழ்க்கை வாழ்வதற்கே
புகைப்பதற்கு அல்ல
* சமூக அணிதிரட்டலும்
மக்கள் பங்கேற்பும்
* சில்லறை விலையில்
சின்னச் சவப்பெட்டி
* எச்சரிக்கை
* இன்று உலகம்
எதிர்நோக்கும் மாபெரும்
சவால் ஓசோன் படலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனப் பீடை கொல்லிகள் ஆக்கத்திற்கா? அழிவிற்கா?

21ம் நூற்றாண்டிலே காலடி எடுத்து வைத்திருக்கும் மானிடர் எமக்கு உலகம் கண்ணிமைக்கும் பொழுதுக்குள் சூழல்வது போல் தோன்றுவது மிகையாகாது. ஆம் இன்றைய உலகின் வியத்தகு விஞ்ஞான வளர்ச்சியும், தொழில்நுட்ப வளர்ச்சியுமே காரணமாகும். மனிதனால் எது செய்ய முடியாது? தனது பரந்த அறிவினால் இவ்வுலகையே தன்வசப்படுத்த முயலுகிறான். இயற்கை மூலங்களை அழித்து செயற்கையால் பலவற்றைக் கண்டுபிடிக்கின்றான். இத்தகைய அருஞ் சாதனைகளை பாராட்டாமல் இருக்கவும் முடியாது. அதே சமயம் அதன் விளைவுகள் ஏற்படுத்தும் பாரிய மாற்றங்களைக் கண்டு அச்சத்தால் மெய்சிலிர்க்கிறது.

நாம் வாழும் இப்பூமியில் நாளுக்கு நாள் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறது. இதன் ஒரு கட்டமாக எம் வாழ்வில் இரசாயனப் பீடைகள் தொற்றிக் கொள்கின்றன. இவற்றை விஞ்ஞானிகளின் முடிவுறாத் தேடல்களின் உத்தி என்றே சொல்லலாம். இவை ஏற்படுத்தும் மாற்றங்கள் எமக்கு மிகுந்த சௌகரியத்தை உடனடியாகத் தந்தாலும் சற்று உள்நோக்கி ஆராய்ந்தால் அது கொண்டிருக்கும் கொடூரங்களும் புலப்படத் தவறாது. இதன் மூலம் நாம் பிறக்கும்போது எமக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதமான இயற்கை சிதைவடைகின்றது. இன்று எமக்கு இதுவொரு சவாலாக உள்ளது என்றே கூறலாம்.

முதலில் நாம் இன்று பயன்படுத்தும் இரசாயன பீடை கொல்லிகளை எடுத்துக் கொள்வோம். இன்றைய நிலையில் நாம் பல்வேறு தேவைகளின் வசப்பட்டுள்ளோம். அதைப் போக்க நிச்சயமாக ஒரு உத்தி தேவைப்படுகிறது. அதுவே பீடைகொல்லிகளுக்கு நாம் அடிமையாகக் காரணமாயும் அமைகிறது. இன்றைய உலகில் சனத்தொகைப் பிரச்சனையால் அதிகளவில் விஞ்ஞானத்தில் தங்கியுள்ளோம். உதாரணமாக பயிர்ச்செய்கைகளில் ஈடுபடும்போது களைநாசினி, கிருமிநாசினி எனப் பலவற்றைப் பயன்படுத்துகிறோம். இதனால் எம் சூழல் பாரிய ஆபத்துக்களை எதிர் கொள்கிறது. வாயு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலம் மாசடைகிறது. நச்சு வாயுக்கள் அதிகமாகி எம்மை அச்சுறுத்துகின்றன. வளியில் தீய வாயுக்களின் செறிவு அதிகமாகிறது. அத்துடன் விவசாயத்தின்போது பீடைகொல்லிகளைப் பயன்படுத்துவதனால் அருகிலமைந்துள்ள நீர்த்தேக்கங்கள் மாசடைகிறது.மற்றும் இவற்றோடு சேர்ந்த சூழல் மாசடைகிறது. அவை பிரயோகிக்கப்பட்ட காய்கறிகள், பயிரினங்களை நாம் உண்பதால் நாம் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றோம். தற்போது பல பெயரறியப்படாத நோய்களெல்லாம் பரவி வருகிறது. பலவற்றுக்கா பீடை நாசினிகளை நாம் பயன்படுத்துகிறோம். இவை பயனைத் தருகின்ற போதிலும் விஷத்துடன் கலந்த நன்மையே தருகின்றது.

இன்று பல்வேறு நாடுகள் அபிவிருத்தி நோக்கம் கருதி பீடை கொல்லிகளைப் பாவனையில் ஈடுபடுத்தியுள்ளன. ஏன்? அபிவிருத்தி நிலையை எட்ட முயன்று கொண்டிருக்கும் எமது நாடும் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றது. பீடை கொல்லிகள் நச்சுப் பதார்த்தங்களாகும். அவற்றை நாம் விலக்கி இயற்கையோடு பின்னிப் பிணைந்து வாழ வேண்டியது அவசியமாகும். இன்றைய காலகட்டத்தில் இவற்றின் ஆதிக்கம் பெருகிக் கொண்டு செல்கிறது. அதே சமயம் மனிதனை மரணமும் மிக அண்மையில் நெருங்கிக் கொண்டுள்ளது. இவை எமது பொன்னான சுந்தர தேசமதை சுடுகாடாக்கக் காத்திருக்கிறது.

நாம் மேற்கொள்ளும் பல்வேறு செயற்பாடுகளில் இரசாயனம் தங்கியுள்ளது. தற்போதைய நிலையை எடுத்துக் கொண்டால் இதுவே விஞ்ஞானத்திற்கு ஆதாரமாகவும் மாறியுள்ளது. இதன் செயற்பாட்டால் எமது உணவு, நீர், வளி என்பவையும் இதர தேவைகளும் இரசாயனக் கலப்பாக மாறுகிறது. அதுவே எமக்கு தூக்குக் கயிறாகவும் மாறுகிறது.

நாம் முன்பு வாழ்ந்த வாழ்வு இனிமையானது. அதில் என்ன குறை கண்டோம்? கண்ணான பூமியில் நிம்மதியாக வாழ்ந்து வந்தோம். என்று எம் வாழ்வில் விஞ்ஞான வளர்ச்சி பிறந்ததுவோ அன்றிலிருந்து எமக்கு வைத்தியசாலை வீடாயிற்று. நோய்கள் நண்பனாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எம் வாழ்வில் இரசாயனப் பாவனைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இரசாயனப் பாதிப்பால் இயற்கை எமக்களித்த கொடைகளே எம்மை வந்து சேர அச்சங்கொள்கின்றன. மண் மாசடைகிறது. மண் வாழ் உயிரிகளின் வளர்ச்சி கட்டுப்படுகிறது. தாவரங்களின் வளர்ச்சி குன்றுகிறது. தாவரங்கள் நஞ்சூட்டப்பட்டவையான மாறுகின்றன. மொத்தத்தில் இயற்கையே நரகமாக மாறும் நிலை வந்துள்ளது. "தன்வினை தன்னைச்சுடும்" என்பது போல் இவற்றையெல்லாம் அனுபவிக்கப் பிறந்த மனிதனின் அழிவுக்கு தானே வழிகோலுகிறான். அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் ஒரு பாவமுமறியாத பகுத்தறிவற்ற விலங்குகளின் வாழ்க்கைப் பிரதேசத்தையும் முட்களின் தேசமாக்கி விடுகிறான். அவற்றின் வாழ்க்கைச் சமனிலையைக் குழப்புகிறான். இயற்கை எழில்களைச் சிதைக்கின்றான். மனிதனின் விரந்த சிந்தனா சக்தியை மெச்சும் அதே சமயம் அதுவே அவன் கழுத்துக்கு தூக்குக் கயிறாக மாறும்போது அது கவலைக்குரிய விடயம் தான்.

எமக்கு நிச்சயம் அபிவிருத்தி தேவைதான். எம் எல்லா மனிதர்களின் எதிர்பார்ப்புமே அபிவிருத்தி ஆகும்.ஆனால் அதுவே இயற்கையன்னையின் சீற்றத்திற்குக் காரணமாகி விடக் கூடாது. எமது எல்லோரது தேவையுமே இயற்கையோடு இணைந்த அதன் சமனிலையைப் பேணும் வகையில் அமைய வேண்டும் கிடைத்தற்கரிய மானிடப் பேற்றைப் பெற்ற நாம் எம் வாழ்வை மகிழ்ச்சியான முறையில் அனுபவிப்போமாக.

ஆக்கம்
த.தமிழினி
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமி பெண்ணுக்கு சீதனம் தேடு

இயற்கை அன்னை படைத்த
இனிய நல்ல சூழலை
இன்பமாக அனுபவிக்கும்
இனிதான அன்பர்களே.

எங்கிருந்தோ வந்தொருவன்
எமையழிக்கத் திட்டமிட்டு
எம்பூமி மடியினிலே
எரிகுண்டை விதைத்து விட்டான்.

மனிதாய் யாம் கூறுவதை
இனிதாய் மனதில் பதியடா
இன்பமான பூமி இழிவாய்ப்போனால்
இனிதான வாழ்வும் இலாது போகுமடா.

விளை நிலங்கள் பாழாக
வீண் தரைகள் மிஞ்சியது
வீதியிலே கட்டவுட்டு
கன்னி வெடி கவனம் என்று.

நம்புங்கள் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை தெறிக்கும்
நிமிர்ந்து போரிட்டு குண்டு வீசி
நீண்ட வனத்தை அழித்துவிட்டீர்.

கடலிலே காவியமாம் போர்க்
கப்பல்கள் கூட்டமாக
கடல் தனிலே மீனவனைக்கொன்று
கடல் நீரையும் நஞ்சாக்கினர்.

கடலிலே கழிவுகள் கழிவதனால்
கடல் நீரும் கழிவானதே
அங்குள்ள மீன்களும் இழிவானது
இதனால் இன்னுயிர்தான் பாதகமே.

என்னவென்று சிந்திக்காதே
எனியும் நேரமில்லை
எழுந்திடு விழிப்புடன்
ஏற்றிடு தூய சுடரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிலேனிய யுகம் என்று கூறு
மாசாக்கினான் கண்டுபிடிப்புச் செய்து
மௌனமானால் பூமித்தாய்
மதிப்பாரின்றி மாசடைந்தாள்.

துன்பமின்றி நாம் வாழ
துரிதமாக வளரும் மாசை
தடுத்திட விரைந்திடுவீர்
திருத்தமாக வாழ்ந்திடுவீர்.

பகுத்தறிவு படைத்த மனிதா
பார் உனது சூழலை செயற்கை இரசாயனமாய்
அழிந்து வளமிழந்தது
அரசும் அதைக் கேட்கவில்லை.

காடழிப்பார் மரமழிப்பார்
கனியழிப்பார் வளமழிப்பார்
வீடழிப்பார் வீதியழிப்பார்
வீதியிலே புலம்பிடுவார்.

குப்பை கூழங்களை கொட்டிடுவார்
துப்புவார் இன்னும் பல செய்வார்
தப்பு தம்மேல் என அறியார்
விதிதான் என்று கதறிடுவார்.

பூமித் தாயின் மடியினிலே
நற்பயிர்களை வளர்த்திடுவோம்
நாட்டு மக்களின் நின்னுயிர்தனை
நலமுடன் காத்திடுவோம்.

கனிதரும் மரங்களை வளர்த்திடுவோம்
பயன்தரும் மரங்களை வளர்த்திடுவோம்
மழை தனை நலமாய் பெற்றிடுவோம்
மானிடர் நாம் இன்பமாக வாழ்ந்திடுவோம்.

மனிதனை அழித்திடும் – போர்
ஆயுதங்களையும் அணு ஆயுதங்களையும்
ஒழித்து அங்கவீனர்கள் என்ற அவல வார்த்தையை
கேளாது சுற்றத்தை பேணி
சுகாதாரத்தை காத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணை தொடும் விஞ்ஞான ஆய்வாளர்களால்
இயற்கை அன்னையை பேணிடுவோம்!

'சுத்தம் சுகம் தரும்' என்ற வார்த்தையின்படி ஒழுகி
சுகம் பெற்று வாழ்ந்திடுவோம்.

உயிரை வெறுப்பது இயற்கை
அதை உணர வைப்பது செயற்கை
இயற்கை அன்னையின் இயற்கைப் படைப்பை
இனிதே பேணிக் காத்திடுவோம்.

இயற்கையின் காடுகளை வளர்த்திடுவொம்
தினம் தினம் மரங்களை நாட்டிடுவோம்
தழையினை பெற்றிடுவோம்
மண்ணரிப்பை தடுத்திடுவோம்.

தவழ்ந்து விளையாடி மண்ணுண்டு
திரிந்த எம் பூமிப் பெண்ணுக்கு
சூழலை காத்து சுற்றத்தை பேணி
சீதனங்கள் பல சேர்த்திடுவோம்.

பூமித் தாய் நொந்து சுமந்திங்கு
நின்னுயிர்கள் நூறாண்டு காலமாய் வாழ்வதற்கு
காற்றுக்கு வேலியிட மரங்களை நாட்டிடுவோம்
சுகாதாரத்தை பேணி சூழலை வளர்த்திடுவோம்.

அனைத்து கரங்களும் ஒன்று சேரட்டும்
அன்பாய் அவனியில் உயிர்கள் பல நிலைத்திட
பூமி பெண்ணின் இயற்கை படைப்பை காத்திட
பூமி பெண்ணுக்கு சீதனங்கள் சேர்த்திடுவோம்.

சேர்த்திடுவோம் சேர்த்திடுவோம் பூமி பெண்ணுக்கு
சீதனங்கள் சேர்த்திடுவோம்.

ஆக்கம்:~ அ.றெக்சனா

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வாழ்வதற்கே புகைப்பதற்கு அல்ல

உலக நாடுகளை இன்று உலுக்கிவரும் வியத்தகு விஞ்ஞானங்கள் வளர்ந்தமையால் மனிதன் இருந்தபடியே தனது செய்றபாடுகளை மேற்கொள்கிறான். இவ்வாறு புறவாழ்வானது விருத்தியடைந்துள்ள போதும் மனிதனது அகவாழ்வானது புகை போதை எனும் மாய அரக்கனால் பீடிக்கப்பட்டு இருள்மயமானதாகவே காணப்படுகின்றது. இந்தப் புகைப்பழக்கமானது எவ்வாறு எங்கு ஆரம்பிக்கப்பட்டதென விவரிக்கமுடியாது.

புகைப்பழக்கம் எவ்வாறு தோன்றியதென கூறமுடியவில்லையாயினும் 15ம் நூற்றாண்டளவில் மெக்சிக்கன் செவ்விந்தியர், தென் அமெரிக்கர் ஆகியோரிடம் காணப்பட்டமைக்கு சான்று கிடைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளிலும் பரவலடைந்தது. பின்னர் உலக மகாயுத்த காலத்தில் (1914-1918) உலகளாவிய ரீதியின் பாவனைக்கு வந்தது. இவ்வாறு உலகமக்களிடம் பெரும் செல்வாக்குப்பெற்று அவனுடன் கூட இருந்து குழி தோண்டுகிறது.

மேலைத்தேசங்களில் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பிரதேசங்களில் பெருமளவில் புகைத்தல் பழக்கம் காணப்பட்டிருந்தது. பின்னர் அப்பழக்கவழக்கமானது ஏனைய மக்களிடமும் கலந்து பரவலடைந்தது. பெரும்பாலும் தற்காலத்தில் இளைஞர்கள் பெருமளவில் இதற்கு அடிமையாகின்றனர். அந்நிய கலாச்சார கலப்பினாலும், அந்நிய நாகரீக செல்வாக்கினாலும் இப்பழக்கம் பரவலடைந்திருக்கின்றது. இளைஞர்கள் புகைத்தல் பழக்கத்தினை கௌரவமாக கருதி பாவித்து அதற்கு அடிமையாகின்றனர். பின்பு தமது சொந்த நாட்டுக்கு சென்று பயன்படுத்துவதால் ஏனையவர்களுக்கு அப்பழக்கத்தை ஊக்குவிக்கின்றனர்.

இவ்வாறான புகைப்பழக்கங்கள் இற்றைக்கு எண்பது அண்டுகளுக்கு முன்னர் பெண்களிடம் காணப்படவில்லை. ஆனால் மேலைத்தேச நாடுகளில் 17-18 வயதுக்குட்பட்ட இளவயதினரே பாவிக்கின்றனர். இளவயதில் பாவிப்பதால் அவர்கள் தொடர்ந்தும் இதனைக் கைக்கொள்ளுகின்றனர். இவ்வாறு ஆண்களிடம் மட்டுமன்றி பெண்களிடமும் பரவி சமுதாயத்தைச் சீரழிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான புகைப்பொருட்களாக சிகரெட், பீடி, சுருட்டு என்பன கொள்ளப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதால் அவற்றிலிருந்து பிறப்பிக்கப்படும் நஞ்சுப்பொருட்கள் உடலில் கலப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. உதாரணமாக புகைப்பொருட்களில் நிக்கொட்டின், தார் எனும் இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. மேலும் புகைத்தலின்போது காபன்மொனொாரொக்சைட் எனும் நச்சு வாயு பெறப்படுகின்றது. இவ்வாறான இரசாயனப் பதார்த்தங்கள் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியன ஆகும். புகைப்பொருட்களை பயன்படுத்துவதால் உடல்நிலையானது பெரிதும் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்பட நேரிடுகிறது.

மேலைத்தேயங்களில் பல இளைஞர்கள் புகைத்தல் பொருட்களை பயன்படுத்தி தமது வாழ்க்கையினைப் பாதியிலே முடித்துக் கொள்கின்றனர். ஒரு சிகரெட்டிலுள்ள நச்சுப்பதார்த்தத்தின் அளவு 20mg ஆகும். ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கும் தகவலானது நமக்கு அதிர்ச்சியூட்டுவனவாக அமைகிறது. புகைத்தல் பற்றிய கருத்துகள் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் பல்லாயிரம் மக்கள் வாழும் வயதில் தமது வாழ்வினை முடித்துக்கொண்டு செல்கின்றனர். அதற்கு புகைப்பொருட்களிலுள்ள நச்சுப்பொருட்களின் தாக்கமே காரணமாகின்றது. ஒருவனுடைய ஆழ்ந்த சுவாசத்தின்போது 90% நஞ்சுப் பொருட்கள் உறிஞ்சப்படுகின்றது. அவை நுரையீரலையும் அதனோடு இணைந்த சுவாசக்கலங்களை பாதித்து பாரிய நோய்களை ஏற்படுத்துகின்றது.

இவ்வகையில் புகைப்பொருட்களிலுள்ள நச்சுப்பொருட்கள் மனிதனுடைய கலங்களை பாதிப்பதுடன் பாரம்பரிய அலகுகளான DNA இல் தாக்கமுற்று கட்டுப்படுத்த முடியாதவாறு பலகலங்களாக பல்கிப் பெருகுகிறது. இதனால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகின்றது. மேலும் காபன்மொனொரொக்சைட் குருதிநிறப்பொருளான ஈமோகுளோபினில் உள்ள ஒட்சிசனை உறிஞ்சுவதால் சுவாசத்துக்கு தேவையான ஒட்சிசன் கிடைக்கப்பெறாது A.T.P தொகுப்பு தாமதமாக மெதுவாக நடைபெறுவதால் உடல்களைப்பு ஏற்படுகின்றது. அத்துடன் சிகரெட் பாவனையால் அதிலுள்ள பிரிபடாத இரசாயனப் பொருட்களின் தாக்கத்தினால் உடற்கலங்களில் முக்கிய பகுதிகளான சுவாசப் பாதையில் பெரும்மாற்றம் நிகழ்கிறது. குருதி உறைதலானது காபன்மொனொரொக்சைட் தாக்கத்தினால் ஏற்படுகின்றது. நுரையீரல் அழற்சி ஏற்படுவதால் குடல்புண், மாற்றமுடியாத நோய்கள் ஏற்படுகின்றது தார் எனும் இரசாயனப் பதார்த்தம் சுவாசப் பாதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பதனால் சுவாசப்பையினுள் உள்ள கலங்கள் சிதைவடைய நேரிடுகிறது.

மேலும் பெண்கள் மத்தியில் காணப்படும் புகைத்தல் பழக்கமானது அவர்களது எதிர்காலச் சந்ததிக்கு தீங்கு விளைவிக்கின்றது. கருச்சிதைவு ஏற்படவும், இரத்தப்போக்கு ஏற்படவும் காரணமாவதுடன் அப்பெண் பெற்றெடுக்கும் குழந்தை முழுவளர்ச்சி இன்றி , மூளைவளர்ச்சி குன்றி, எடைகுறைந்த குழந்தையாக பிறக்கின்றது. இக்குழந்தையின் வாழ்க்கை கேள்விக்குரியதே. இவ்வாறாக சமூகத்தின் மத்தியில் பெரும் சமூக பொருளாதார சிக்கல்களையும் ஏற்படுத்தவல்லனவாக அமைகிறது. இந்தப் புகைத்தல் பழக்கமானது ஏனையவர்களிடம் பரவவிடாது காக்கப்படவேண்டும். ஏனெனில் பெரியவர்களின் புகைத்தல் பழக்கம் அல்லது நண்பர்கள், உறவினர்களிடம் காணப்படும் புகைத்தல் பழக்கமானது ஏனையவர்களிடத்தும் பரவலடைகின்றது.

இதனால் புகைக்கும் பழக்கமுடையவன் தனது சுவாசப்பையை தானே சுட்டுக்கொள்கிறான். அமெரிக்க நாட்டு சுகாதார திணைக்கள செயலாளர் ஜோசெப் பின்வருமாறு கூறுகின்றார். "புகைப்பிடித்து வாழ்பவன் தற்கொலை செய்து சாகிறான்" என்கிறார். ஏன் அவ்வாறு குறிப்பிட்டார் எனச் சிந்தித்துப் பார்க்கையில் ஒவ்வொருவனும் தனக்கு தீங்கு இருப்பதைத் தெரிந்திருந்தும் அதன் பாவனைத்தூண்டுதல் தன்மையினால் அதற்கு அடிமையாகுகின்றான். தீயவிளைவுகளை தெரிந்தே அவன் பயன்படுத்தி தன்னை அழிவுக்கு இட்டுச்செல்கின்றான்.

புகைத்தல் பொருட்களின் பாவனையானது தன்னை பாதிப்பதுடன் தன்னைச் சார்ந்த சூழலிலும் அதன் தாக்கம் மேலிடுகின்றது. இதனால் நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்படமுடியாதனவாக விளங்குகின்றான். புகைத்தல் பொருட் பாவனையானது இரத்த ஓட்டத்தை அதிகரிப்பதுடன், மாரடைப்பு போன்ற பாரிய நோய்களையும் ஏற்படுத்துகின்றது. "அரிது அரிது மானிடராதல் அரிது" என்ற ஔவையின் கூற்றுக்கு இணங்க அரிய மனிதப் பிறவியைப் பெற்றுக்கொண்ட நம் சமுதாயமானது புகைத்தலின் கெடுதியை உணர்ந்து அவற்றினை கைவிட்டு நல்லவாறாக வாழவேண்டுமென கருதி விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. தெருவோரங்களில் சுவரொட்டிகளும் அவற்றின் தீமைகளினை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே ஒட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் புகைத்தல் பாவனையின்போது வெளிவிடப்படுகின்ற புகையிலுள்ள நச்சுப் பதார்த்தங்கள் ஏனைய உயிர்களின் சுவாசத்துடன் கலப்பதால் சூழலிலுள்ள உயிரினங்களும் இதன் தாக்கத்துக்கு உள்ளாகிறது. ஆண்களிடம் காணப்படும் புகைப் பொருட் பாவனை விந்துகளின் வீரியத்தை இழக்கச்செய்வதுடன் மலட்டுத்தன்மையையும் ஏற்படுத்தக்கூடியது. தொடர்ந்து பாவித்து வருவதால் உடலில் ஓர் இயலாமைத் தன்மை, சளி, தடிமன், மூச்சிழுப்பு என்பன ஏற்படுகின்றது. புகைப்பொருட்களுக்கான மூலப்பொருள் புகையிலை ஆதலால் அதிலுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியனவாகும். சாதாரண மனிதரிலும் பார்க்க புகைத்தல் பொருட்களைப் பயன்படுத்துபவர்களே அதிகளவிலாக புற்றுநோயினால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறாக புகைத்தல் பொருட்களைப் பயன்படுத்தும் மனிதர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதை அறிந்தும், உணர்ந்தும் கொண்ட சர்வதேச சமூகமானது மக்களுக்கு அதன் தீமைகளை விளக்கி இவற்றின் பயன்பாட்டை குறைக்க முற்படுகின்றது. சிகரெட் பெட்டியிலேயே அது தீங்கானது என்ற விடயத்தினை குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் மனித சமுதாயமோ அதனைப்பொருட்படுத்தாமல் இன்றும் புலர் இப்பாவனையை மேற்கொள்கின்றனர். இவ்வாறு பாவனையாளர்கள் அதிகரித்துச் செல்கின்றனரே தவிர அவற்றை கைவிட்டபாடில்லை. இவர்களது சீர்கேடுகளை உணர்ந்த பல தொண்டர் நிறுவனங்கள் சேவையாற்றுவதற்கு முன்வந்துள்ளன.

சர்வதேசவ தொண்டர் நிறுவனங்களின் வரிசையில் உலக சுகாதார நிறுவனம், போரூட், சர்வதேச புற்றுநோய் சங்கம் என பல நிறுவனங்கள் சேவை செய்துகொண்டிருக்கின்றன என்பதை மறக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது. இவ்வாறான தாபனங்களின் பிரச்சாரத்தினாலும், விழிப்புணர்வினாலும் சமுதாயத்துக்கு தீயபொருட்களின் பாவனை, அவற்றின் தீமைகள் என்பவற்றினை எடுத்துக்காட்ட முடிகிறது. மேலும் மாணவர்கள் மத்தியில் இது தொடர்பான கருத்துகளை முன்வைப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினரிடம் இந்த தாக்கங்கள் ஏற்படாதவாறு காக்கவேண்டும் என்பதற்கேயாகும். இதனை மக்கள் மத்தியில் உணரவைக்கவே வைகாசி 31ம் திகதி உலக புகைப்பொருள் எதிர்ப்பு தினமாக கொண்டாடப்படுகிறது. இதனால் தம் வாழ்க்கையை வளம்படுத்திக்கொள்ள முடியும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நற்பயன் பெறவேண்டும். இவ்வாறு நல்வாழ்வு வாழ்ந்து ஒளிமயமான எதிர்காலம் உன்முன்னே தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக அணி திரட்டலும் மக்கள் பங்கேற்பும்

திரு.எஸ்.தவநாயகம் – சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
பி/உ.உதவி ஆணையாளர் அலுவலகம்

வறியோர் தம்மில் மறைந்து கிடக்கும் ஆக்கத்திறனை வெளிக்கொணர்ந்து இன்று நடைமுறையில் உள்ள சமூக பொருளாதார ஜதார்த்தத்தை அவர்களுக்குப் பொருத்தமானதாக மாற்றி அமைத்து தமது சுய சக்தியில் நம்பிக்கைவைத்து இன்றைய அதிகார சக்திகளுக்கு எதிரான ஒரு சக்தியை கட்டியெழுப்பவதற்கான சமூக பொருளாதார செயற்பாடே சமூக அணிதிரட்டலாகும்.

ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் சனத்தொகையில் அதிகமான மக்கள் வறியோர் ஆவார். இவ் அதிக மக்கள் தொகையினர் அந்நாடுகளின் சமூக பொருளாதார செயற்பாடுகளில் மிகவும் குறைந்த அளவிலே பங்குபற்றுகின்றனர். திட்டமிடும் போதும், முடிவெடுக்கும்போதும் அவற்றைச் செயற்படுத்தும்போதும் அவர்களின் பங்களிப்பு இல்லை. அவர்களின் எழுச்சிக்குரல் இல்லை. அபிவிருத்திப் பலா பலன்கள் எதுவுமே அவர்களிடம் வருவதில்லை. எந்த அபிவிருத்தி வேலைத்திட்டமும் அவர்களால் உணரப்பட முடியாது. அவர்கள் பொருளாதார சமூக நிலையில் மிகவும் பலவீனமானவர்கள், இயங்க முடியாதோர், எதிர்பார்ப்புக்கள் எல்லாம் தவிடுபொடியாகிப் போன உணர்வுகளுடன் நிச்சயமற்ற எதிர்பார்ப்போடு அன்றாட கஞ்சிக்காக போராடுவோராவர். ஆகவே வறிய மக்களது தேவைகளைப் புரிந்துகொள்ளக் கூடிய இயக்கத்தினை கட்டியெழுப்ப வேண்டும். மேலும் எமது புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்கள் இவ் வறிய மக்களின் இலக்கு குழுக்களாகக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

மேல் இருந்து கீழான திட்டமிடலை மேற்கொள்ளாமல் கீழ் இருந்து மேலான திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். இதற்கு வறிய கிராம மக்கள் சமூக அணிதிரட்டலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இம் மக்கள் குழுவிலிருந்து புதிய சமூக அணி திரட்டலாளர்கள் உருவாக்கப்பட வேண்டும். ஒரு சனசமூக நிலையத்தினதோ கிராம அபிவிருத்திச் சங்கத்தினதோ நிர்வாகத்தினை தெரிவதுபோன்று சமூக அணிதிரட்டலானதை தெரிவு செய்ய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு பயிற்சி பெற்ற மக்களை நேசிக்கின்ற நல்ல இதயம் படைத்த ஒருவர்தான் சமூக அணிதிரட்டலாளராக செயற்பட முடியும். மரபு வழியான தலைமைத்துவத்தினை தொடர்ந்து பேணுபவர்கள் சமூக அணிதிரட்டலாளர்களாக வரமுடியாது.

**பங்கேற்பு அபிவிருத்தியானது –**

கிராம மக்கள் தாங்கள் முகங்கொடுக்கும் முக்கிய பிரச்சனைகளை விளங்கிக்கொண்டு அப் பிரச்சனைகளை தீர்க்கக்கூடிய வழியை தேடிக்கொள்ளும் அமைப்பிற்கு உட்படலே பங்கேற்பு அபிவிருத்தியாகும். பங்கேற்பு அபிவிருத்தியில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள் சமூக பொருளாதார ரீதியில் பலவீனமான மக்களேயாவர்.

பங்கேற்பு அபிவிருத்தி முறையினை செயற்படுத்துவதற்கு முதலில் செய்ய வேண்டியது சிறு குழு அமைப்பு முறையாகும். துடிப்பான செயற்பாடுள்ள சிறு குழு ஒன்றின் அங்கத்தவர் தொகை 15இற்கும் 25இற்கும்இடைப்பட்டவையாகும். இத்தொகையானது 15ஐ விட குறையும் பொழுது அனுபவத் தன்மை, விடயதானம் என்பன குறைவடையும். 25ற்கு மேற்படும்போது முடிவெடுக்க முடியாமல் போய்விடும்.

**சிறு குழுக்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கம்**

1. தீர்மானிக்கப்பட்டபடி குறிப்பிட்ட தினத்தில் கலந்துரையாடலை நடாத்துதல்.
2. அதில் சகலரும் பங்குபற்றல்.
3. ஏற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்புத் தொகை
4. அதனை முறையாக வைப்பிலிடல்
5. சுய விமர்சனம்
6. இறுக்கமான இணைப்பையும், நம்பிக்கையையும் வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு குழுவொன்று பிரவேசிக்கக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளை இனங்காணுதல்

1. பங்கேற்பு அபிவிருத்தி முறையானது மக்கள் தேவைகளை புரிந்துகொள்ளும்போது வெற்றியடையும் இயக்கமாக மாறும்.
2. மக்கள் பங்கேற்பினை நடைமுறைப்படுத்தும் பொழுது மரபு வழி கிராமிய தலைமைத்துவம் பொது அனுபவங்களின் கிராமிய தலைமைத்துவத்துடன் மோதிக் கொள்ளும்.

## வறியோர் தாங்கள் வசிக்கும் சூழலில் சமூக பொருளாதார நிலையை தாமே விளங்கிக் கொள்வர்

### தாமே விளங்கிக் கொள்ளுதல் என்பது

1. தனித்தனியாக தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இயலாது என்பதனையும்
2. நடைமுறையிலுள்ள சம்பிரதாயபூர்வ அமைப்பின் மூலம் அவற்றை பூர்த்திசெய்து கொள்ள இயலாதென்பதையும்,
3. இதற்காக புதிய அமைப்பு ஒன்று தேவை என்பதையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

அதாவது மரபு ரீதியான சங்கங்களால் வறியோர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாது. வறியோர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டுமாயின் மாற்று அமைப்பு ஒன்று கட்டாயமாகத் தேவை.

### பங்கேற்றல் என்பது,

### பங்களிப்பு

- சரீர உதவித்திறன் கருத்துக்கள்
- கட்டிடப் பொருட்கள்
- பணம்
- கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறுவகப்படுத்தல்**

- குழு அமைத்தல்
- தலைமைத்துவத்தை உருவாக்கல்
- கூட்டுறவு நடவடிக்கைகள்
- சுய பொறுப்புணர்வு
- குழுக்கள் சமூகங்களை சுய முகாமைத்துவம் செய்தல்

**சக்தியுற்றவர்கள் ஆக்குதல்**

- நிதி கடன்களை சுய முகாமைத்துவம் செய்தல்
- பங்கேற்பு திட்டமிடல் கண்காணிப்பு மதிப்பீடு
- சுய நிதி வழங்கல்
- அமுக்கக் குழுக்கள் – அழுத்தக் குழுக்கள்

பலவீனமான மக்களுக்கு பங்கேற்பு அபிவிருத்தியின் மூலமே பயன் கிட்டும். பங்கேற்பு அபிவிருத்தியுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்பான இரண்டு முக்கிய அம்சங்களாவன சுய சக்தியும் பங்கு பற்றலுமாகும். சுய சக்தியில் பங்குபற்றலும், பங்களித்தலில் சுய சக்தியும் அடங்கி உள்ளதால் இவற்றை தனித்தனியாக பிரிக்க முடியாது. கிராம மக்கள் ஒரே சமமான மக்கள் பிரிவினருக்கான இலட்சணங்களை கொண்டவர்கள் அல்ல. வறிய மக்கள் சதாகாலமும் சமூக பொருளாதார ரீதியில் பலமிக்க பிரிவினரில் தங்கி இருப்பவராக உள்ளனர். இவ்வாறான தங்கியிருத்தல் காரணத்தால் உருவான சமத்துவமற்ற தன்மையால் சுய சக்தி பங்கேற்பு என்ற இவ் இரு அம்சங்களும் கிராம மக்களிடம் அனேகமாக எழிச்சி பெறாமல் உள்ளேயே அடங்கிக் கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக யதார்த்தத்தை சமூகமே புரிந்துகொள்ளல் என்பது அச்சமூக அமைப்பினை தனக்குச் சாதகமான வகையில் மாற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். இதுவே பங்கேற்பு அபிவிருத்தியின் முதற்கட்டமாகும்.

## பங்கேற்பு அபிவிருத்தி பற்றிய சில சிந்தனைகள்

- பங்கேற்பு அபிவிருத்தி என்பது சமூகத்தில் உள்ள எல்லா மக்கள் தொகுதியினருக்காகவும் செயற்படும் அபிவிருத்திவேலை ஒன்றல்ல, இது விசேடமாக வறிய மக்களின் அபிவிருத்தியைக் கொண்டதாகும்

- பங்கேற்பு அபிவிருத்தியின் அடிப்படை நோக்கம் என்னவெனில் சிந்தனைக்கான சக்தி ஒன்றினை பெறும் வகையில் வறிய மக்களின் நலன்களை திறந்துவிடுதலாகும். அதாவது ஆக்க சக்திக்கு புத்துயிர் கொடுத்தல் என்பதன் மூலம் கருதப்படுவதும் இதுவே.

- கிராமத்தைப் பற்றியும் வறிய மக்களின் யதார்த்த நிலையைப் பற்றியும் விளங்கிக்கொள்ள வேண்டுமாயின் கிராமம் பற்றிய விமர்சனம் தொடர்ந்து செய்யப்பட வேண்டும். இது ஒரு சாதாரண விமர்சனம் அல்ல. வறிய மக்களின் பங்குபற்றலோடு பிரச்சனைகளை விளங்குவதுடனான அபிவிருத்தி முறையை நாடி மேற்கொள்ளும் விமர்சனமாகும்.

- பங்கேற்பு அபிவிருத்தி இலக்காகக் கொள்வது வெளியே திட்டமிட்டு கொண்டுவரப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் அல்ல. இவ் அபிவிருத்தி முறையானது வறியவர்களால் அவர்கள் அகப்பட்டுள்ள பிடியை உணரச் செய்து அதில் இருந்து விடுபடக்கூடிய வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லறை விலையில்
# சின்னச் சவப்பெட்டி

நான் நினைத்தால் நீ அழிந்தாய் – ஆனால்
நீ நினைத்தாலும் என்னை அழிக்கமுடியாது.

சுருள் சுருளாய் புகைச் சுருளாய்
தினம் தினமும் இழுத்து விடு – வெகு விரைவில்
இருள் சூழும் உன்வாழ்வை – இதை
மனம் திறந்து கூறுகின்றேன்.

ஒருமுறை என்னைத் தொட்டால் – நீ
மறுமுறையும் தொடத்துடிப்பாய் – ஆனால்
குறிப்புடனே உன்வாழ்வை நான்
பொறிவைத்து முடித்திடுவேன்.

அந்திரக்ஸ் கிருமியை நீ – இன்று
உயிராயுதம் என்கின்றாய் – ஆனால்
எந்த நாளும் உன் உயிர்க்கு
உயிர்க் கொல்லி நானே.

நீ என்னை எரித்தெரித்து
தினம் தினமும் மகிழ்கின்றாய் – ஆனால்
நீ எரித்து மகிழ்வதெல்லாம்
மணம் மிகுந்த உன் வாழ்வை.

அல்கொய்டா அமைப்பினரை
வல்லரசு அழித்திடலாம் – ஆனால்
என்னை அழிப்பதற்கு – இங்கு
எவ் அரசும் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைச் சுருளாய் வெளிவந்து – உன்
அகத்தினுள் சென்றிடுவேன் – என்ன?
திகைப்பாக இருக்கிறதா – இதுவும்ஒரு
வகைப் பயங்கர வாதமே.

சிகரெட்டாய் பீடியாய் நல்ல
சுகம் தரும் சுங்கானாய் – என்னை
வகை வகையாய் காண்கின்றாய் – இவை
புகையிலையின் விளை பொருளே.

இருமுகின்றாய் துடிக்கின்றாய்
குருதியுடன் உமிழ்கின்றாய்– இவ்வாறு
வருத்தியுன்னை கொல்வது – என்
விருந்தாம் புற்று நோயே.

நுரையீரல் பாதை எங்கும் – நான்
விரைவாக படிந்திடுவேன் – உன்
அலங்கார வாழவினையே – நான்
அணுஅணுவாய் துன்பிப்பேன்.

அரை அடி நீளத்திலே – நீ
ஆயிரம் இன்பம் காண்கிறாய் – இதை
கருதி நீ எனை எரித்தால் – உன்
எதிரிலானும் அழிந்திடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை!

சில்லறை விலையில் எனைவாங்கி – உனக்கு
கல்லறை கட்டுகின்றாய் ~ இதை
சொல்லுகின்றேன் ஏன்என்றால் ~ என்
வல்லமையை காட்டுதற்கே.

என் பல்குழல்கள் இன்று
உன் போன்ற மானிடரின்
பொன்னான வாழ்வுதனை
சின்னாபின்னம் செய்ய.

இதைக் கண்ட ஐ.நாவும்
பதைக்கிறது பதைக்கிறது
புகைக்கு தடை என்று ~ இன்று
மிகையாக பறை சாற்றிடுதே.

புகை உனக்கு பகை
இதை நீ உணர்ந்திடின்
நடை போடும் உன்வாழ்க்கைக்கு
திடமான காப்புறுதி.

நீ என்னை ஆக்கினாய் ~ ஆதலினால்
கூறுகிறேன் மானிடனே கேள்!
என்னை நீ மாற்றிடு ~ இல்லை
உன்னை நீ இழப்பாய்.

இனியும்........
எம்மவருள் பலரை நீ நாள்தோறும் எரித்து
உயிர்க் கொலையை செய்தால் ~ உனக்கு
சில்லறை விலையினிலே நல்லதொரு
சின்னச் சவப் பெட்டி நானாவேன்.

ஆக்கம்: – சே.மாளவிகா
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று உலகம் எதிர்நோக்கும் மாபெரும் சவால் ஓசோன் படலம்

இருபத்தோராம் நூற்றாண்டாம் இன்றைய கணனி யுகத்தில் காலடிபதித்துள்ள இன்றைய மாபெரும் மனித சமுதாயம் எவ்வளவுதான் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியினை கண்டாலும் நியூட்டனின் மூன்றாம் இயக்க விதிப்படி வளர்ச்சிக்கு சமனான மறுதாக்கம் ஒன்றினை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த மறுதாக்கத்தில் ஒன்றுதான் சூழல் மாசடைதல்.

சூழல் என்பது எம்மைச் சூழ மேலும், கீழும், முன்னும் புறமும் அண்டம் வரை அளவிலான அனைத்தினையுந் தன்னகத்தே கொண்டதொன்றாகும். மனிதனானவன் பௌதீகச் சூழல் எனப்படும் சூழலின் ஓர் மாபெரும் பிரிவினிலே தங்கி சிலவிடத்து சூழலிற்கு தான் அடங்கியும் சிலவிடத்து சூழலைத் தன்தேவைக்கேற்ப அடக்கியும் வாழ்ந்துகொண்டிருக்கின்றான்.

இவ்வாறான அற்புதமான சூழலில் தங்கி வாழும் மனிதன் தனது திட்டமிடப்படாத கொடிய செயற்பாட்டினாலும், சிந்தனையின்றிய மடமையான செயற்பாடுகளினாலும் சூழலினை மாசுபடுத்திக்கொண்டிருக்கிறான். மனிதனின் இக்கொடிய மடைமைச் செயற்பாடு அவனை மாத்திரமன்றி ஏனைய முழுமையான உயிர்ச்சூழலையும், இயற்கையையும் பாதித்து வருகிறது. இப்பாதிப்பினை சூழல் மாசடைதல் எனலாம். இம் மாசடைதலின் ஓர் பகுதியே ஓசோன் படையில் ஏற்படும் கிழிசல்கள்.

ஓசோன் என்பது மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்து உருவானதாகும். இதன் சூத்திரம் $O_3$ என்பதாகும். இது பூமியில் இருந்து பல மைல்தொலைவில் புவியின் கவசம் போன்று தொழிற்படும் ஓர் இயற்கையின் வரப்பிரசாதமாகும். இவ்வோசோன் படையானது மனிதனின் ஓர் செயற்படுகளால் இன்றைய காலகட்டத்தில் அழிந்தவண்ணம் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம் வளர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனிதனிற்கு அரிய பல நன்மைகளைப் பயப்பினும் அவனிற்கு தெரியாவாறு கற்பனை செய்ய முடியாத எண்ணிலடங்கா பல பிரச்சினைகளை தோற்றுவித்தவண்ணம் உள்ளது.

விஞ்ஞானம் மட்டுமன்றி இன்னும் சனத்தொகை வளர்ச்சியும் கணக்கிட முடியாதளவு பல்கிப் பெருகிக்கொண்டே செல்கின்றது. இதனால் மனிதன் தனக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளான இருப்பிட வசதிக்காகவும், பயிர்ச்செய்கைக்காகவும் மட்டுமன்றி வீதிகள், அமைத்தல், கட்டிடங்கள் அமைத்தல், நீர்த்தேக்கங்கள் என்று பல தேவைகளிற்காக காடுகளை அழித்து வருகின்றான். இதன் பயனை உணர்ந்திருக்கும் மனிதன் இதனால் ஏற்படும் கொடிய விளைவுகளைத் தெரிந்தும் தெரியாதுபோல் நடந்து கொள்கின்றானோ என்னவோ!.

மனிதனிற்கு மிக அவசியமான வளி ஒட்சிசனாகும். இதன் சதவீதம் வளிமண்டலத்தில் உள்ள பிறவாயுக்களைக் காட்டிலும் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. தாவரங்கள் தற்போசணிகள். எனவே அவை உணவைத் தொகுப்பதன் பொருட்டு ஒளித் தொகுப்பினை நிகழ்த்துகின்றன. இதன்பயனாய் அத் தாவரங்கள் காபனீரொட்சைட்டினை தாம் உள்ளெடுத்து துணை விளைபொருளாக ஒட்சிசன் வாயுவை வெளி விடுகின்றது. இதனால் வளிமண்டலத்தின் சமனிலை பேணப்படுகின்றது. காடழிப்பு காரணமாக தாவரங்களின் செறிவு குறைகின்றது. இதன் பயனாய் வளியில் உள்ள ஒட்சிசன் அளவு படிப்படியாக குறைவடைய காபனிரு ஒட்சைட் வாயுவின் சதவீதம் அதிகரித்து கொண்டு செல்லும். மனிதன் தனக்குத் தேவையான பிரதான வாயுவைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்படுகின்றது.

சூழலில் காபனீரு ஒட்சைட்டு வாயுவின் அளவு அதிகரிப்பதால் வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதனையே பச்சைவீட்டு விளைவு என்கிறோம். இதன் காரணமாய் புவியின் முனைவுப் பகுதிகளில் காணப்படும் பனிப்பாறைகள் உருக ஆரம்பிக்கின்றன. இதனால் சமுத்திரத்தில் அமைந்து காணப்படும் உயரங்குறைந்த சிறு தீவுகள் நீரில் அமிழ்ந்து உயிராபத்துக்களும், பொருட் சேதங்களும் ஏற்பட ஏதுவாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியில் வெப்பநிலை அதிகரிப்பால் நீர் வறண்டு புவி பாலைவனமாகி விடக்கூடிய ஓர் சூழ்நிலையும் ஏற்பட்டு விடும். இதன் விளைவு உயிரினங்கள் அழிய ஆரம்பிக்கும், உணவுப் போட்டி ஏற்படும், உலக மகாயுத்தங்கள் உருவெடுக்கும். வறுமை தலைவிரித்தாடும். இதனைத் தவிர்ப்பதாயின் யாது செய்ய வேண்டும்?.

சனத்தொகை விருத்தியினை ஓரளவு கட்டுப்படுத்தி காடழிப்பினைத் தடை செய்து அவ்வாறு அழிப்பதாயின் வேறு புதிய மரங்களை நாட்டல் வேண்டும். அது மட்டுமன்றி "மரம் நடுகைத் தினம்" போன்ற தாவர பரம்பலின் பாதுகாப்பிற்கான திட்டங்களை வரைந்து அவற்றினைச் செயற்படுத்தல் வேண்டும். காபனீரு ஒட்சைட் போன்ற வாயுக்களை வெளிவிடக்கூடிய இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதனையும், வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதனையும் தவிர்த்து நம்மையும் பாதுகாத்து நம்மைச் சூழவுள்ள பிற உயிர்களையும் பாதுகாக்க வழி செய்ய வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மேற் குறிப்பிட்டவற்றினை விட மிக மிக முக்கிமான பிரச்சினை ஒன்று ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள தாக்கம். இத்தாக்கத்தின் விளைவுகள் மிகப் பயங்கரமானவை.

ஓசோன் படையினைப் பாதிப்படையச் செய்யும் வாயுக்களில் மிகவும் முக்கியமானதோர் ஸ்தானத்தினை வகுக்கும் வாயு CFC எனப்படும் குளோரோ புளோரோ காபன் என்பதாகும். இவ்வாயுவானது மனிதனின் நடவடிக்கையினாலேயே வெளிவிடப்படுகின்றது. விஞ்ஞானத்தின் அரிய பல கண்டு பிடிப்புக்களாலேதான் இவை வெளிவிடப்படுகின்றன. குளிர்சாதனப் பெட்டிகள், புளோர் ஒளிவுக்குழாய், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றின் பயன்பாட்டினாலேயே பெருமளவு குளோரோ புளோரோ காபனானது வெளியிடப்படுகின்றது.

பெற்றோல் இயந்திர வாகனங்கள் முதலியனவற்றின் பயன்பாட்டினாலும் வெளியிடப்படும் ஈயநைத்திரேற்று ஆனது ஓசோன் படையைப் பாதிப்படையச் செய்கின்றது. இயற்கை அன்னையின் சிறந்த படைப்பான இப் புவியினைப் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இவ் ஓசோன் படையானது சூரியனில் இருந்து வரும் புறவூதாக்கதிர்கள், அல்பா, பீற்றா கதிர்கள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்தி புவிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமான சூரியக் கதிர்களைமட்டும் உட்புகவிடும் வடிகட்டி போன்று தொழிற்படுகின்றது.

ஓசோன் படை பாதிக்கப்படுவதனால் புவியினை வந்தடையும் அல்பா, பீற்றா, போன்றனவும் புறவூதாக் கதிர்களும் மனிதன் மற்றும் பிற உயிரிகளின் உடலினைத் தாக்குவதனால் தோல்புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகளிற்கு உயிரினங்கள் ஆளாக வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஒன்றானது உருவாகி விடுகின்றது. இதனால் ஓர் ஆரோக்கிமான எதிர்கால சமுதாயமானது உருவாகும் என்பது கேள்விக்குரிய விடயமாகும். இதனால் மூளைவளர்ச்சி குன்றிய மற்றும் உடல் உளவளர்ச்சி பாதிக்கப்பட்ட ஓர் சுமையான சமுதாயமானது உருவாகிவிடுகின்றது.

இது மாத்திரமன்றி சூரியனில் இருந்து வரும் மேலே குறிப்பிட்ட தீய கதிர்கள் புவியின் மேற்பரப்பில் காணப்படும் தாவரங்களினை அழித்து மழைவீழ்ச்சியினை குன்றச் செய்துவிடுகின்றது. இதனால் உலகில் வறுமை முதலிய கொடிய விளைவுகள் ஏற்பட ஏதுவாகின்றன.

இன்றைய விஞ்ஞானிகள் ஓசோன்படையில் ஏற்பட்டுள்ள துவாரங்களினை நிவர்த்தி செய்வதில் ஈடுபட்டு வெற்றி காண்கின்றனராயினும் இப்புவியில் CFC போன்ற ஓசோனைப் பாதிக்கும் வாயுக்களை வெளியிடுங் கருவிகளின் பயன்பாடு குறையும்வரை ஓசோனில் பாதிப்பு என்றென்றும் ஏற்பட்டவண்ணமே இருக்கும்.

எனவே குளோரோ புளோரோ காபன் முதலிய வாயுக்களை வெளியிடும் கருவிகளிற்குப் பதிலாக மாற்றீட்டு உபகரணங்களைக் கையாள வேண்டியது ஒவ்வொரு மனிதனினதும் கடமையாகும். இன்றைய காலகட்டத்தில் மாபெரும் சவாலாக அமையும் இவ்வோசோன் பாதிப்பினை நாம் தடுக்கவோ அழிக்கவோ வேண்டுமானால் நாம் அனைவரும் முழுமூச்சுடன் ஓசோனில் பாதிப்பினை ஏற்படுத்தாதபடி நம் வாழ்க்கையினை மாற்றி அமைத்து ஓசோனின் பாதிப்பில் இருந்து பாதுகாப்பைப் பெற்று சிறப்பு வாழமுடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!.

ஆக்கம் – அ.ஜீவிதன்
யா/ஞானசாரியார் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PONNAMPALA VID. * KARAVEDDY * J/KARAVEDDY LIBRARY Book No.

போட்டி இல 02

# பொது அறிவு

1. நவீன ஓவியத்தின் தந்தை யார்?

2. நைல் நதியின் நீளம் என்ன?

3. கறையான் ஒரு மாதத்தில் இடும் முட்டைகள் எத்தனை?

4. அண்மையில் விமான விபத்தில் பலியான பிரபலமான கிரிக்கெட் வீரர் யார்?

5. நான்கு முழங்கால்களை உடைய விலங்கு எது?

6. முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட விற்றமின் எது?

7. உலக எயிட்ஸ் தினம் கொண்டாடப்படுவது?

8. இந்த நூற்றாண்டின் முழுச் சூரிய கிரகணம் எப்போது எங்கே தென்படும்?

9. புத்தாயிரமாமாண்டில் முதல் ஐ.நா.உச்சி மாநாடு எங்கே நடைபெற்றது?

10. "டான்சி" நிலப்பேர வழக்கில் சம்பந்தப்பட்டவர் யார்?

**முடிவு திகதி 30-08-2002**

விடைகளை

போருட்
ஒளி,
அத்தியடி,
பருத்தித்துறை. என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்

**போட்டி 1 இன் முடிவுகள் அடுத்த ஒளி இதழில் வெளியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு/திருமதி/செல்வி

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

ஒளி சஞ்சிகைக்கு உங்களது ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம். உங்கள் தரமான ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். ஒளி அமைப்பில் அங்கத்துவம் பெறவிரும்புபவர்கள் தங்கள் பகுதியிலுள்ள சி.க.கூ.சங்கங்கள் மூலம் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

**ஒளி அமைப்பு**
ஆத்தியடி, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org